உ

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீபழனி வேலாயுத சுப்பிரமண்ணியர்.

# ஸ்தோத்திரப் பாமாலை.

இஃது

திருக்காஞ்சியைச்சார்ந்த ஏகமுகாம் பேட்டையில்

சமாதிஷ்டராயெழுந்தருளியிருக்கும்

ஸ்ரீமத் முனியப்பசுவாமிகள் மாணாக்கர்

மணிமங்கலம் திருவேங்கட முதலியாரால்

இயற்றப்பட்டு

திருமுக்கூடலென்னும் திருப்பதியிலிருக்குஞ்

சில பக்திமான்களால்

சென்னை

அஷ்டலக்ஷ்மிவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1883.

உ

திருச்சிற்றம்பலம்.

# தோத்திரப்பாமாலை.

இளையனார் வேலூர் சுப்பிரமணியர்

துணை.

காப்பு வெண்பா.

சீராருஞ்செவ்வடிவேற்சேயிளையனார்வேலூர்த்
தாரார்முத்தையன்றனைப்பாட—ஏராரும
நஞ்சமர்ந்தகண்டனருளாகமுகந்தானுயர்பொற்
கஞ்சமலர்த்தாளிணையேகாப்பு.

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

ஞானவினீர்க்கஞரவிந்தமெனத்தொல்லுலகைக்
கரைந்துக்காட்டி
வானமபமாக்கியநின்வண்மையறிந்தேசிறிது
வாழ்த்தவென்று
வீணமுறாபுந்தியுடையடியேற்குசசெந்தமிழி
· னீட்டமின்று

லெனறிந்துன்றண்ணருளெற்களித்திலையீதெவரளிப்ப
ரிசைப்பாபையா. (1)
சங்கைசெயுமைம்புலனும்வேடுவராலிளைத்தமனச்
சலநந்தீர்ந்தே
கொங்கையிளமின்னார்கள்கூட்டுறவற்றிருந்தருளைக்
கூடுநாடா
னிங்கெதுவோவென்றேழையழலின்மெழுகெனக்
கசிவுற்றேங்கிவாடும்
பங்சமறநின்றுயிருக்குயிராகிப்பாலிப்பாய்பாவி
யேற்கே (2)

### சந்த விருத்தம்.

முத்தமதியாலிவண்மயங்கிமயறன்னீர்ந்
பித்தவுலகோருடன்பிதற்றினதல்லாற்
சுத்தமனமாகவினைசோகமதுபாவித்
இத்துணையிலத்தவருள்யானடைவதென்றே. (3)

காலமுதற்றேசமுடன்காண்பனவெல்லாமாய்ச்
சாலவுருவாயருவசாக்ஷியிவையல்லாச்
கோலமுறுகின்றவனைக்கூடுமடியார்தஞ்
சீலநெறியெற்கருள்செயப்பெறுவதென்றே. (4)

### அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

நாறுமலக்கலமெனும்வெங்குழிமடவாரிடைப்பட்ட
நாயினேனுங்
அறாமுலகத்தினிலுன்னடியார்குற்றேவல்பணிக்
கொள்ளவென்றால்

வீறுமனமோசிறிதுமொடுங்கிலாதேனையீர்த்து
வீணிற்றள்ளும்
ஏறுமயில்சூழிளையனார்வேலூரினிதமர்ந்தோ
யென்செய்கேனே. (5)

பாலிலாத்தமொழிச்சியர்தம்பணவரவல்குலிற்
பட்டபாவியேற்குன்
பாலெலாத்தீமனஞ்சிறிதுமில்லாமையறிந்துமென்ன
பான்மைகண்டோ
வேலுற்றகரத்தெவ்வினையாட்கொண்டாய்
வினைவறியேன்வஞ்சனேனும்
நாலெலாத்தமதிவிளைனார்வேலூரிலமர்ந்தடியார்
நவிற்றுந்தேவே. (6)

காதார்ந்தமருமலரிற்சுரும்புகுடைந்தொழுகுகுழற்
றையலார்தங்
கோதார்ந்தகொங்கைமயலுழத்துமனக்கோதகலாக்
கோளனேனுன்
சீதார்ந்தசேவடிக்கணன்புசிறிதேனுமிலேன்றேவே
தீயேன்
வாதார்ந்தமனமவரின்மீட்டுவயப்படுத்துலென்றோவஞ்ச
னேற்கே. (7)

கூறிநட்பிழம்போவன்றிக்குணமிலாமூர்க்கர்தம்முன்
னேறிபவந்தகாரவாணவவறையோவொன்றுந்
தேறொருஞ்ஞதிருண்டகூந்தற்றெரிவையர்மயலிற்சிக்கி
நீறணிபுபத்தோய்நின்னைநெஞ்சினின்மறந்திட்டேனே

அவிரிழைசமவாதொல்குமிடைச்சியராசாபாசப்
பவக்கடலுழைக்குமிந்தப்பதகனின்பைம்பொற்பாத
மிவர்புணைப்பற்றிபின்னமேங்கவோவைத்தாய்சீர்க்குந்
தவமுயரினோர்வேலூர்சண்முகாதஞ்சநீயே. (9)

உலைபடாவேற்படையைத்தாங்கியொருகரத்தாலே
யுலகமெல்லாம்
அலைபடாவண்ணமளித்திடுமோண்மையறிந்தையா
அடியனேனுன்
முலைபடாவாயாலோர்மொழிகனிந்தவுணாகேட்பான்
முழுதுநம்பிச்
சொலைபடாவிளையனோர்வேலூர்க்குவந்தவெனைக்
குறிக்கொள்வாயே. (10)

முருகவிழ்கூந்தற்செவ்வாய்முறுவலார்மோசத்தாலே
அருகுறுமடியார்நீங்களாரெனவழைத்துங்கேளா
திருளுறுமனத்தோர்போலவிருந்திடலேசாரோநான்
றெருளுறுவண்ணமென்னேசிறியனேற்கருள்செய்வா
[யே.

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

பண்ணவர்பரவும்பரமனேபைம்பொற்பதமலர்
பணிகிலேனெனினு
மண்ணினிலேழைமனதறிந்தையவாழ்ந்திடவைப்ப
தென்றருள்வாய்
புண்ணியமறியேன்பெண்மதிபிறழாப்பொய்யனேன்
பூரணபரவு

கண்ணியர்வதியுமிளையனூர்வேலூர்க்கத்தனின்னடிய
வன்காணே. (12)

பண்ணினேர்மொழியார்பக்கமேமருவும்பரமனே
பாவியேனுனை
நண்ணினேனெனையீந்தரற்றிடவார்க்கும்நவிற்றரும்
வெறுமைநோயமுதலாந்
திண்ணியமுருட்டுப்பகைவர்கைப்படுமுன்தீனனேற்
கருடரசினைவாய்
புண்ணியர்பரவுமிளையனூர்வேலூர்ப்பூரணாசின்னடி
துணையே. (13)

தத்துவமெனுமோர்கூட்டமாந்தொண்ணூற்றறுவராற்
றயங்கிடுபேவாடுஞ்
சத்துவமறியாத்தமத்தனேனெனக்குன்றண்ணருட
ருவதென்றருள்வாய்
முத்தருள்ளார்டியமர்முழுமணியேமூர்க்கனேன்மோக
மாமரவின்
தத்திவாயப்பட்டேனிளையனூர்வேலூர்சண்முகாதஞ்
சமுன்பதமே. (14)

கட்டளைக்கலித்துறை.

பாலொத்துத்தேனொத்துக்கண்டொத்துப்பாகின்பத
முதிர்ந்த
சேலொத்தகணணாரின்சொல்லிற்கனிந்தவர்தீநெறியின்

பாலோக்கும்புல்லனேனையஞ்சலென்றுன்பதத்திலன்பு
சூலோககனின்னருள்செயவாயடியாசுகபொருளே? ( )

எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

கச்சணிந்துகலவைமிகத்திமிர்ந்தகொங்கைக்கருந்தட
வேற்கணணியாதங்காமத்தாழ்ந்த
கோசஞ்சைபதியுடையோரைக்கூடிநின்றன்குணங்கமழு
ங்கொழுமலர்த்தாட்குறுகேனந்தோ
அச்சமதுசிறிதில்லேனறமொன்றிலலேன் அறமுடை
யோரவர்பக்கலணுகில்லேன்
பச்சைமயிலேறிமணிகதுயிற்றுமிஞ்சித்தடம்புனல்
சூழ்பதிவளர்வோபபணிக்கொள்வாயே. (16)

கொஞ்சுமஞ்சுகமொழியினார்மயக்கிற்கூசிநின்னடிகுறிக
கொண்டோனினும
அஞ்சலஞ்சலென்றருகணைத்தையா அருமைநின்னருள
ளித்திலையென்றல்
தஞ்சமாரெனக்களிப்பரிங்கரசேகுமியனேற்கினந்தாழ்
த்துதல்முசோ
விஞ்சுமாலயனாமுன்முதலேத்துமிளையனார்வேலூர்
விழைந்தவித்தகமே. (17)

வரையிகந்தொளிருமணித்திருமதில்சூழ்வண்மைநீடு
முன்வாயிலிலடியேன்
றெருளிலாதவனேனுமுன்னடியைத்தேடியன்பினாற்
சேர்ந்துநின்றிருப்ப

அருளிலாதவர்போலனீயையா அருகமைந்தெனையணைத்
திலையென்றால்
பொருளிதல்லவீதெனவெவருனைப்போதமார்வேலூர்
பொருந்துபுண்ணியனே. (18)
மஞ்சளாவியவிஞ்சிசூழமாடமமருமன்னநீயெனவுனை
யடுத்தேன்
கொஞ்சமேனுமென்மனதறிந்தையாகுறித்திலாதெனை
க்கூவிடாதிருந்தாய
நஞ்சமோவுனக்கடியவரென்றால்நாதநம்பினேனிம்மகி
யேனோ
கொஞ்சுமின்சொலினஞ்சுகவடியார்கூடிநின்றவெங்கோ
ளறியேனே. (19)

போதனொடுநற்றவத்தவர் சூழ்வைபோகத்
தியாகர்தந்தனையனென்றுன்றன்
சீதமாரடிச்சேவைபவிரும்பிச்சென்று
நந்துயாதீர்வமென்றெண்ணிக்
காதலோடுநின்கடிநகர்வந்தேன்
காரணுவெனைக்காத்திலையென்றால்
மாசரார்நகைபடுத்தனையென்றேவையு
மேசுமென்னையவீதழகோ. 20

வேதமூர்த்தியென்றுனையெண்ணியடுத்தேன்விழலுக்கு
வோவேண்டுவபெறுவான்
போதன்மாதவனரன்முதற்றேவர்போந்திழிந்தனைப்
போற்றிநின்றிருப்பக்

நேயமார்மொழியாருடன்கூடிக்கிளைக்குநீயெனை
வளைப்பையின்றையா
மாதவஞ்செறியிளையனார்வேலூர்மன்னவென்னுளந்
துன்னுமாமணியே. (21)

சொச்சகக்கலிப்பா.

தெண்ணீர்க்கயற்கண்ணார்சிந்தைமயலுழக்கும்
நண்ணீரமில்லாதநாயனையேனையிடினென்
கண்ணீரைமாற்றக்கருதாயேற்கண்ணாளா
உண்ணீர்மையில்லானென்றுன்னையுலகேசாதோ. ()

பாகார்மொழிச்சியர்வெம்பாசவிகலாற்றளர்ந்தே
நீகாவாயென்றழுங்கிநின்றரற்றிச்சந்நிதிமுன்
பாகாயுருகிப்பதைத்தவெனைப்பாராயேல்
ஓகோவென்றையாஉலகமுனையேசாதோ. (23)

மாறுவனுபூதிவாய்க்கவுனைவந்தடுத்தேன்
ஆறுப்பெருக்கியழுகின்றேனையாவே
பேறுவெனக்கதனைப்பேசாயேனினசெவிதான்
ஏறுதவன்செவியென்றுன்னையுலகேசாதோ. (24)

அடியனிவனென்றேயடுப்பர்சிலராங்கவர்க்கிந் [ன்
தடியனேனின்னருளைச்சார்ந்தவன்போலேநடிக்கே
அடியேயறியாதேன்ஐயாவவர்க்களிக்கும
படியெனக்குப்பேசாயேலபாவியெனையேசாரோ. (25)

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்-

கடிமதுநாறுங்கூந்தற்கன்னியர்காமமூழ்கி
அடியனீவந்தவாறென் ஆதரவளிப்பமஞ்சேல்
வொடிநதிடுன்றுக்கமென்றுதோவியம்போலநின்றுற்
றுடித்துலகேசுமுன்னைத்தூலனேனுபயுமாறே. (26)

எழுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

கண்முதலைந்துங்கரமுதலைந்துங்
கருதுளமாதியாறைந்தோ
டெண்ணினைந்தேத்தியுருகுமிப்பொழுதே
பொறுத்திடாதுகநீதனக்கருளவாய
மண்ணினிலடியேன்திண்ணியதருமன்
வருகணமரணவாதனையால்
புண்ணியவினையேமறப்பனாலின்றே
போற்றுவனுயிர்த்துணைநீயே. (27)

தஞ்சமென்னுயிர்க்குத்துணையெனவருளைத்
தாவினேன்தையலாரிருவர்
கொஞ்சியேபக்கமருவிடச்சேவற்
கொடியுடன்சத்திவேலோங்க
நஞ்சுவாயரவமெஞ்சுயிரேங்க
நடனமாமயின்மிசையெதிர்ந்தே
அஞ்சனீமைந்தாதஞ்சநாமென்று
னய்மவிவ்வாண்மையார்க்குளதே. (28)

நாயினுங்கீழ்மையானெனநலிந்தேன்
நாதனென்னலிவறிந்தருளாற்

ஞாபரீயஞ்சேலுனைச்செமதருளாக்
    தொல்லுலகறியவின்றளித்தோம
காயுமுன்வறுமைநோய்பகைகலிகள
    கனவினுநினைத்துடராமே
யாயுமென்சத்தியபயமென்றளித்தா
    னையவிவ்வாண்மையார்க்குளதே. (29)

தாயினுங்கருணையினியவெம்பெருமான்
    தனியிடமறிந்தனந்தலிலே
சேயெனவழைத்துன்சிறுமையையொழிந்தோஞ்
    செல்வநீயஞ்சலெனறணைத்தான்
நாயினுங்கடையநாயினேனெமான
    நலமறிபாமலேவெக்குண்டு
வாயினிலவந்தவழக்கெலாமுரைத்தேன்
    வள்ளலுக்கேதுகைம்மாறே. (30)

திருச்சிற்றம்பலம்.

இளையனார் வேலூர் சுப்பிரமணியர்

**தோத்திரப்பாமாலை**

முற்றிற்று.